# மேட்டுப்பாளையம் நகராட்சி

08.03.2019ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

1. இந்நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள நிறுவனங்கள் மற்றும் கடைகளை கள ஆய்வு மேற்கொண்டதில் சில கடைகள் பூட்டப்பட்ட நிலையில் உள்ளதாக வருவாய் ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளனர். எனவே, தொழில் வரி நிலுவை கேட்பு தொகை ரூ.44,358/– நீக்கம் செய்யவும் நிலுவை மற்றும் நடப்பு தொகையினை தள்ளுபடி செய்யவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** தனி அலுவலர் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2367/2015/அ2

2. மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியிலுள்ள 33 வார்டு பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளின் கணக்கெடுப்பு விவரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்தல், புதிய பயனாளிகளுக்கு வழங்க ஏதுவாக விண்ணப்பங்கள் நகலெடுத்தல் ஆகிய பணிகளுக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| கணினியில் பதிவேற்றம் செய்தல் | | | படிவங்கள் நகலெடுத்தல் | | |
|---|---|---|---|---|---|
| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை | வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
| 1 | பவர்புல் கம்ப்யூட்டர் எஜீகேசன், மேட்டுப்பாளையம் | ரூ.10/– (படிவம் ஒன்றுக்கு) | 1 | ஆர்த்தி ஜெராக்ஸ், மேட்டுப்பாளையம் | ரூ. 7/– |
| 2 | ஏ.கே.டைப் ஆபீஸ் மேட்டுப்பாளையம் | ரூ.10.50 (படிவம் ஒன்றுக்கு) | 2 | ஏ.ஆர்.ஜெராக்ஸ் மேட்டுப்பாளையம் | ரூ.6/– |
| 3 | பிரைஸ் பிரிண்டிங் மேட்டுப்பாளையம் | ரூ.11/– (படிவம் ஒன்றுக்கு) | 3 | ஜெயம் ஜெராக்ஸ் மேட்டுப்பாளையம் | ரூ.6.50 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. இனம் எண். Iல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண்.1ல் கண்டுள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. இனம் எண். IIல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண்.2ல் கண்டுள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

ந.க.எண்.541/2019/எப்1

3. உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் 2016 நடைபெறாததால் நகராட்சி ஆணையாளரே தனி அலுவலராகப் பொறுப்பேற்று கடந்த 25.10.2016 முதல் செயல்படுவதால் கட்டிட விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்து அனுமதி வழங்க ஏதுவாக நகராட்சி ஆணையாளரே உள்ளூர்த் திட்டக்குழு உறுப்பினர் செயலராகவும், தலைவராகவும், செயல்பட அதிகாரம் அளிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| 4. | அரசு கடிதம் எண். 16224/MA.IV(2)2018. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 26.02.2019ல் இணைப்பில் கண்டுள்ளவாறு அபராதம் நிர்ணயம் செய்து துணைவிதிகள் உருவாக்கிடவும். அதனை உடனடியாக அரசிதழில் பிரசுரம் செய்து அதன் பிரதியை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்கண்ட துணை விதிகளை (Bye-laws) செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யவும் மற்றும் அரசிதழில் வெளியிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 30,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1497/2017/எச்2 |
| 5. | இந்நகராட்சியில் 2019–20ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் கணினி மென்பொருட்கள், டோனர்கள், அடிகாப்பியர், லீகல் காப்பியர், ரிப்பன் மற்றும் அலுவலக உபயோகத்திற்கு தேவைப்படும் எழுதுபொருட்கள், வரிசெலுத்தும் இரசீதுகள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை வாங்குவதற்கு கூடுதலாக ஆகும் செலவினம் ரூ. 10 இலட்சம் மற்றும் கணினி மென்பொருட்கள், டோனர்கள் வாங்குவதற்கு ரூ.2 இலட்சம் ஆக மொத்தம் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்ற ஆண்டு எழுதுபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனமாக ஈரோடு மாவட்ட பெண்கள் எழுது பொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட், இண்ட் 1312, நிறுவனத்திடமிருந்து இவ்வாண்டிற்கான எழுது பொருட்கள், கணினி மென்பொருட்கள் கொள்முதல் செய்து கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.708/2019/டி1 |
| 6. | நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பாக நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்ட கீழ்க் கண்ட நிறுவனங்களுக்கு தொகை வழங்க பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>1. Ravi Publicity Service Chennai - 86,625/-<br>2. The Daily Thanthi. Coimbatore - 54, 075/-<br>3. Bright Advertining, Chennai - 27,982/-<br><br>மேற்கண்ட தொகையினை விளம்பரம் செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.3372/2019/இ1 |
| 7. | நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டப்பணிகளின் விவரத்தினை Newsmen Associates Limited நிறுவனம் மூலம் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கு தொகை ரூ.9996/–ஐ வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, தொகையினை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.3372/2018/இ1 |

8\. மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்விநிதி 2018–19 கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்புதலுக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தத்தாரர் பெயர். | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | <u>கல்விநிதி 2018–19</u> வார்டு எண்.20, மேட்டுப்பாளையம் நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதல் தளத்தில் (பழைய கட்டித்திற்கு மேல் ) கூடுதலாக வகுப்பறை கட்டுதல் | ரூ.8.50 இலட்சம் | திரு.வி.செல்வராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.டி.ராதாகிருஷ்ணன் | 1.74% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | <u>பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி 2018–19</u> வார்டு எண்.20, மேட்டுப்பாளையம் நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முதல் தளத்தில் கூடுதலாக வகுப்பறை கட்டுதல் | ரூ.10.00 இலட்சம் | திரு.டி.ராதாகிருஷ்ணன் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.வி.செல்வராஜ் | 1.84% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

9\. தமிழ்நாடு அரசாணை எண்.138(MAWS) நாள்.31.12.2018ன்படி மற்றும் அரசிதழ் எண்.429 நாள்.31.12.2018 அரசு அறிவிக்கையில் நகராட்சி தனி அலுவலர் பதவிக்காலத்தை 09.01.2019லிருந்து மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டித்து உத்திரவிட்டு வரப்பெற்றுள்ளது. அரசிதழின்படி வரப்பெற்ற அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பதிவு செய்யலாம்
ந.க.எண்.1500/2016/சி3

10\. மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு வருகிற 01.04.2019ஆம் தேதி முதல் குடிநீர் கட்டணம் உயர்வு செய்யப்பட உள்ளது. உயர்வு செய்யப்பட உள்ள குடிநீர் கட்டண விவரத்தினை Bright advertising நிறுவனம் மூலம் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கு தொகை ரூ.1,44,648/–ஐ வழங்க பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை Bright advertising நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.
ந.க.எண்.88/2019/அ5

11\. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனங்களுக்கு 2019ம் ஆண்டிற்கு இன்சூரன்ஸ் பிரிமியம், சாலைவரி மற்றும் பசுமைவரி ஆகியவற்றைச் செலுத்த வேண்டியுள்ளதால் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 6,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.958/2019/எச்1

12. பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் வாகனம் எண்.தா40–4100ற்கு 2019–2020ஆம் ஆண்டிற்கு பசுமை வரி மற்றும் வருடாந்திரவரி தொகையினை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த உள்ளதால் ரூ.10,000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.
ந.க.எண்.430/2019/இ1

13. மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி 2018–19ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 08.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு விழுக்காடு%** |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.8, மகாஜன பள்ளி பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆணையாளர் குடியிருப்பு கூடுதல் கட்டிடத்திற்கு தேவையான மின்வசதி, குடிநீர்வசதி, கழிப்பறை வசதி மற்றும் தரைத்தளம் அமைக்கும் பணி | ரூ.9.90 இலட்சம் | திரு.சி.நாகராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.எம்.வேலுசாமி | 3.35% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

14. மேட்டுப்பாளையம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2018–19ன் கீழ்க்கண்ட பணிகளுக்கு 08.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.4, சங்கர் நகர் பகுதியில் நியாய விலைக்கடை கட்டுதல் | ரூ.9.90 இலட்சம் | திருவாளர்.ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்பராஸ்டக்சர்ஸ் | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். எஸ்.எஸ்.கோபாலகிருஷ்ணன் | 0.05% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.32, தாசம்பாளையம் சாலையில் (நாகலிங்கேஷ்வரா் கோவில் சந்திப்பிலிருந்து நகராட்சி எல்லைப் பகுதிவரை) தார்சாலை மேம்பாட்டு பணிகள் செய்தல் | ரூ.9.50 இலட்சம் | திருவாளர். எஸ்.எஸ்.கோபாலகிருஷ்ணன் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்பராஸ்டக்சர்ஸ் | 0.61% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | வார்டு எண்.32, மேட்டுப்பாளையம் நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முதல் தளத்தில் கூடுதலாக வகுப்பறை கட்டுதல் | ரூ.10,00 இலட்சம் | திரு. என். ஜெகநாதன் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. டி. ராதா கிருஷ்ணன் | 1.86% மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | |
|---|---|
| | மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 15. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் சட்மன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2018–19ன் கீழ் திட்ட இயக்குநர் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கோவை அவர்களின் ந.க.எண்.435/2018/பி2 நாள்.28.02.2019 அன்று கீழ்க்கண்ட இரண்டு பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பெற்று மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br><table><tr><td>வ. எண்.</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு</td></tr><tr><td>1</td><td>வார்டு எண்.4, சங்கர் நகர் பகுதியில் நியாய விலைக்கடை கட்டுதல்</td><td>ரூ.9.90 இலட்சம்</td></tr><tr><td>2</td><td>வார்டு எண்.32, தாசம்பாளையம் சாலையில் (நாகலிங்கேஷ்வரர் கோவில் சந்திப்பிலிருந்து நகராட்சி எல்லைப் பகுதிவரை) தார்சாலை மேம்பாட்டு பணிகள் செய்தல்</td><td>ரூ.9.50 இலட்சம்</td></tr></table><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 16. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளிலும் வரி மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு கேட்புகளை செலுத்தக்கோரி அனைத்து வரி விதிப்புத்தாரர்களுக்கும் சென்றடையும் வகையில் ஆட்டோவில் ஒலிபெருக்கி அமைத்து விளம்பரம் செய்ய ஆகும் கூடுதல் உத்தேச செலவினம் ரூ.30,000/– நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** 1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்<br>2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று அவசர அவசியம் கருதி விளம்பரம் செய்யவும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க. எண்.3293/18/அ2 |
| 17. | இந்நகராட்சியில் தூய்மை இந்தியா குமுமத் திட்டம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் 2018–19 திட்டத்தின் கீழ் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio–Mining முறையில் சுத்தம் செய்து உரக்கிடங்கினை புதுப்பிக்கும் பணிக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள Centre for Environmental Studies பிரிவில் ஆலோசனை கேட்டு குப்பைகளை Biomining முறையில் சுத்தம் செய்ய ரூ.1,77,000/–க்கு வரைவோலை மூலமாக செலுத்த வேண்டியுள்ளது. இத்தொகையை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1845/2018/இ1 |

18. இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் வாகனம் எண்.தா 40–4100ற்கு 2019–20ஆம் ஆண்டிற்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகை செலுத்த ரூ.50,000/– செலவினத்திற்கு தனி அலுவலர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்

ந.க.எண்.430/2019/இ1

19. தலைமைநீரேற்று நிலையம் மற்றும் காரமடை நீருந்து நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஜீன்–2018 முதல் அக்டோபர்–2018 வரை உண்டான ஐந்து மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ. 1,87,387/ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | பதவியின் பெயர் | ஜீன் 2018 மிகை நேரப்படி | | ஜீலை 2018 மிகை நேரப்படி | | ஆகஸ்ட் 2018 மிகை நேரப்படி | | செப்டம்பர் 2018 மிகை நேரப்படி | | அக்டோபர் 2018 மிகை நேரப்படி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரம் | தொகை | நேரம் | தொகை | நேரம் | தொகை | நேரம் | தொகை | நேரம் | தொகை | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | |
| I | தலைமை நீரேற்று நிலையம் | | | | | | | | | | | | |
| 1 | எஸ். மகேஸ் குமார் | மி.ப.நிலை 1 | 36 | 7158 | 52 | 10193 | 48 | 9409 | 40 | 8102 | 48 | 9409 | |
| 2 | ஆர்.ராஜா | மி.ப.நிலை 1 | 40 | 7062 | 16 | 2785 | 32 | 5569 | 52 | 9352 | 48 | 8354 | |
| 3 | என். கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 60 | 8827 | 32 | 4641 | 56 | 8122 | 40 | 5995 | 64 | 9564 | |
| 4 | கே.ரங்கராஜ் | கிளீனர் | 36 | 5056 | 28 | 3876 | 32 | 4430 | 48 | 6867 | 64 | 9114 | |
| 5 | எஸ்.புருஷோத்தமன் | உதவியாளர் | 24 | 2621 | 24 | 2584 | 32 | 3446 | 24 | 2670 | 32 | 3446 | |
| II | காரமடை நீரேற்று நிலையம் | | | | | | | | | | | | |
| 6 | டி.ஜான் பாஸ்கர் | காவலாளி | 32 | 4622 | 40 | 5696 | 40 | 5696 | 40 | 5886 | 48 | 6835 | |
| | | | மொத்தம் | 35346 | | 29775 | | 36672 | | 38872 | | 46722 | 187387 |

மொத்தம் ரூ. 1,87,387/– ( ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து மூன்னூற்றி என்பத்தி ஏழு மட்டும்).

மிகை நேரப்பணியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 30.03.1989ம் தேதிய ந.க.எண்.24372/89/ஒபிணு எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால் ஜீன்–2018 முதல் அக்டோபர்–2018 வரையிலான ஐந்து மாதங்களுக்கான மிகைநேரப்படி ரூ.1,87,387/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.5220/2011/இ1

20. மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆங்காங்கே இன்டர்லிங் செய்ய தேவையான உதிரிச் சாமான்கள் விநியோகம் செய்யவும் தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான வால்வுகள் மற்றும் பைப்புகள் விநியோகம் செய்து பொருத்திக் கொடுக்கவும் 15.02.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 08.03.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s. R.V.எலக்ட்ரிக்கல்ஸ் 25, A.R.R சாமிலைன் காட்டூர் கோயமுத்தூர். | ரூ.5,00,000/– | ரூ.4,73,545/– |
| 2 | M/s.அல்கெம் இண்டஸ்டிரீஸ் 32A, ஊட்டி ரோடு மேட்டுப்பாளையம். | ரூ.5,00,000/– | ரூ.4,39,247/– |

**அலுவலகக் குறிப்பு :** மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.அல்கெம் இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிளை ஏற்க குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1157/2018/இ1

21 மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள நீர்முழ்கி மோட்டார்கள் காயில் ரிவைண்டிங் செய்யவும், பம்பின் பழுதுகள் அகற்றவும், பங்களாமேடு பொதுக் கழிப்பிடத்தில் உள்ள ஏர்கம்பிரஸர் பழுது அகற்றவும் 15.02.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 07.03.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | ஏ.துரைசாமி, AP செல்வம் ரீவைண்டிங் ஒர்க்ஸ், 16, ரயில்வேஸ்டேஷன் ரோடு, மேட்டுப்பாளையம். | ரூ.2.90 இலட்சம் | ரூ.2,84,996/– |
| 2 | வேலுசாமி, 6.EB காலனி, மேட்டுப்பாளையம். | ரூ.2.90 இலட்சம் | ரூ.2,95,130/– |

**அலுவலகக் குறிப்பு :** மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.ஏ.துரைசாமி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிளை ஏற்க தண்ணீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
ந.க.எண்.4383/2018/இ1

| | |
|---|---|
| 22. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் **2018–19ம்** முதல் அரையாண்டிற்கு வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதித் தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஆண்டுக் கணக்குகள் தயாரித்து மற்றும் தட்டச்சு செய்து வழங்கியதற்கு டி.ஹேமப்பிரியா, கோவை அவர்களுக்கு ரூ.**4500/–** (ரூபாய் நான்காயிரத்து ஐநூறு மட்டும்) வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம் |
| 23. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் **2016–2017ம்** ஆண்டு மற்றும் **2017–2018ம்** ஆண்டு கணக்குகள் தணிக்கை ஆய்வு மேற்கொண்டதற்கு **1920ம்** ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் அரசாணை எண். **62** நிதி (தல நிதி) துறை **17.01.1994ன்படி** தணிக்கை கட்டணம் **2016–2017ம்** ஆண்டிற்கு ரூ.**86,914/–ம் 2017–2018ம்** ஆண்டிற்கு ரூ.**94,539/–** ஆக இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து மொத்தத் தொகை ரூ.**1,81,453/–ஐ** (ஒரு இலட்சத்து எண்பத்தி ஓராயிரத்து நானூற்றி ஐம்பத்தி மூன்று மட்டும்) அரசு கணக்கில் செலுத்த தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.**115/2019/**அ**3** |
| 24. | மேட்டுப்பாளையம் நகராட்சி பங்களாமேடு நீரேற்று நிலையத்தில் இருந்து நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் காரமடை நீரேற்று நிலையத்தில் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து இந்திய அரசு அச்சகத்திற்கு நீரேற்றம் செய்யப்படுகிறது. தற்போது நீரேற்றம் செய்யும் பம்பிங் மெயின்கள் எல்லாம் தேசிய நெடுஞ்சாலைத் துறை சாலையில் உள்ளதால், சாலை விரிவாக்கம் செய்யும் பொருட்டு குடிநீர் பைப்புகளை இடமாற்றம் செய்யும்படி உதவிப்பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை க.எண்.**64/2018–19/**உ.பொ நாள்.**05.02.2019** அன்று அளித்த பரிந்துரையின் பேரிலும், மேலும் பணிகள் செய்யும் போது அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு இந்திய அரசு அச்சகத்திற்கு குடிநீர் விநியோகிக்காமல் அவர்கள் சிரமப் படுவதாலும் இடமாற்றம் செய்ய முடியாததால் உடைப்பு ஏற்பட்ட பகுதிகளில் உள்ள பைப்புகளை அகற்றிவிட்டு புதிதாக வாங்கி மாற்றவும் அதற்குத் தேவையான உதிரிச்சாமன்கள் வாங்கவும் தற்போது வரிவசூல் பணி என்பதால் குடிநீர் இணைப்புகள் துண்டிப்பு செய்ய வெளியாட்களை வைத்து தினசரி வசூல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.**2,00,000/–க்கு** மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>2. குடிநீர் மெயின் பைப்புகள்உடைப்பு சரி செய்யும் பொருட்டு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டும், வரி வசூல் தீவிரம் செய்யும் பொருட்டும், குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதியை பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.**000373/2019/**இ**1** |
| 25. | இந்நகராட்சியின் ஆடுவதை சாலை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய இசைவாணையைப் புதுப்பிக்காமல் இயங்கி வருவதாகவும் இசைவாணையைப் புதுப்பிக்க இசைவாணைக் கட்டண நிலுவைத் தொகை ரூ.**43,600/–ஐ** உடனடியாகச் செலுத்துமாறு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடுவாரியம், கோவை(வடக்கு) அவர்களிடமிருந்து குறிப்பாணை வரப்பெற்றுள்ளது. எனவே அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்தை நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15ன்** கீழ் மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம் |

26. மேட்டுப்பாளையம் நகராட்சியில் ஒப்பந்ததாரராக உள்ள திரு.D.K.ரங்கசாமி அவர்களின் பெயரில் உள்ள EMD, FSD, ASD தொகை ரூ.2,39,250/—ஐ திரும்ப வழங்க கோரியுள்ளார்.

எனவே, மேற்குறிப்பிட்ட தொகை ரூ.2,39,250/—காலம் கடந்த வைப்புத் தொகையில் இருந்து வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** தனி அலுவலர் அனுமதிக்கலாம்
ந.க.எண். 2056/2018/இ1

27. மேட்டுப்பாளையம் நகராட்சியின் உரத்திடலில் அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை வாகனங்கள் மூலம் அகற்ற 05.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | திரு.G.K.S.சேதுபதி | 3,48,280/— |
| 2. | திரு.எம்.வேலுசாமி | 3,58,632/— |

இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.G.K.S.சேதுபதியின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.308/2019/எச்2

28. இந்நகராட்சிக்குட்பட்ட 12 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தூய்மை பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு திருவாளர் எஸ்.எஸ்.இஞ்ஜினியர்ஸ்., கோவை என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பணிவுத்திரவானது 04.01.2019 உடன் முடிவடைவதாலும் பள்ளிகளின் வேலை நாட்கள் ஏப்ரல் 2019 வரை உள்ளதாலும் பொது சுகாதார அவசர அவசியத்தையும் பள்ளி மாணவ மாணவிகளின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிக்கு மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்க காலதாமதம் ஏற்படும் என்பதாலும், தற்போது பணி மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கே அவர்கள் ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தத் தொகையின் அடிப்படையிலும் தொகை வழங்கவும் மேலும் ஐந்து மாத காலத்திற்கு (05.06.2019) நீடிப்பு செய்து உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.4008/2019/இ1

29. மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2018—2019ம் ஆண்டு ஊதிய நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 2011ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.05.2019 முதல் 89 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.17,37,500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1688/2016/எச்1